உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] பவஹு வைகாசிமீ [பகுதி-௭.
Vol. XXXI. May-June 1934. No. 7.

திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்வான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம்.

சரித்திரம் என்பது உலகிற் பிரசித்திபெற்ற புண்ணியபுருஷர்களுடைய அறிவு ஆற்றல் ஒழுக்க வழக்கங்களையும், அவரது நற்குண நற்செயல்களையும் பலரும் அறிந்து அவ்வாறொழுகிப் பயனடைதற்கும், அப்புண்ணியபுருஷருடைய புகழுடலம் நிலைபெற்றுநிலவுதற்கும் உபகாரமாகக் கற்றுவல்ல நல்லபண்டிதர்களால் ஆராய்ந்து தொடர்புடையதாகத் தொகுத்தெழுதப்பெறும் வரலாறேயாம்.

அவ்வரலாறுகள் ஒருசில புனைந்துரைவகையாலும் ஒருசில வாயுரைவகையாலும் வரையப்படும். அவற்றுள் இச்சரித்திரம் வாயுரைவகையால் வரையப்பெற்றது.

இதன் கதாநாயகர் சரித்திரமெழுதுதற்குரிய உத்தமகுணங்கள் பலவும் ஒருங்கமையப்பெற்றவரென்பது உலகப்பிரசித்தம். அவரது சரித்திரத்தையெழுதி அச்சிட்டு இத்தமிழுலகுக்கு உபகரித்த ஒப்புரவாளர், மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள். கதாநாயகர்பெருமையும் ஆக்கியோரது பெருமையும் ஒருங்கியையத் தோன்றிய இச்சரித்திரம் தக்கோரால் மிகவும் நன்குமதிக்கத்தக்கதே.

*

இச்சரித்திரத்தால் பொதுவாகக் கதாநாயகருடைய நற்குண நற்செயல்களாகிய ஒழுகலாறு பலவும் புலப்படுவதுடன், சிறப்பாக அவரது கவித்துவசக்திகளும் ஆஸ்திகபுத்தியும் சிவபக்தியும் பரோபகாரசீலமும் பொறையுடைமையும் பொருட்பற்றின்மையும் பாடஞ்சொல்லும் வன்மையும், தனிச்செய்யுட்களியற்றும் சாமர்த்தியமும் பிரபந்தவகைகளியற்றும் பெற்றியும், புராணங்களியற்றும் புலமையும் பிறவுமாகிய பலவகை விருத்தாந்தங்களும் நன்கு புலப்படுகின்றன. அவரது வாழ்நாள்முழுதும் எப்படிப் படிப்படியாய் உற்சர்ப்பிணியாகவே சரீரநிலை வளர்வடைந்துசென்றதோ அப்படியே அவரது கல்வி அறிவு ஒழுக்கங்களும் உற்சர்ப்பிணியாகவே வளர்வடைந்தமுறைகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. அவையெல்லாம் ஒருவர் உயர்ந்தோராதற்குரிய ஒழுகலாற்றின் படிமைகளாக விளங்குகின்றன.

இச்சரித்திரம் முழுதும் பட்டாங்குரைக்கும் உரைநடையாயிருப்பினும் வல்லார்வாய்ப்பட்டமையால் அது புனைந்துரைநடையினும் சிறந்த இன்பம் பயப்பதாயிற்று. இங்கு, பட்டாங்குரைக்கும்நடையே வல்லார்வாய்ப்பட்டுழித் தன்மைநவிற்சியணியாய்ப் பிறவணிகளினும் இன்பம்பயத்தல்பற்றி அவ்வணிகளுக்கெல்லாம் முதன்மைபெற்றுநிற்றலும் நினைக்கத்தகும்.

இச்சரித்திரம், ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை உற்றுநோக்குமிடத்து உலகியலறியலுறுவார்க்கு அதனைத் தெளிவுபெறக்காட்டும் ஒரு கண்ணாடியென்றே சொல்லலாம்.

இச்சரித்திரம் பிள்ளையவர்களது சரித்திரமாத்திரமென்னாது தேசசரித்திர ஆராய்ச்சிசெய்வார்க்குச் சென்ற நூற்றாண்டின் தமிழணங்கின் சரித்திரமும் உடனிலையாயறியும்படி எழுதப்பட்டதென்றேகொள்ளலாம். அம்மட்டோடமையாது பல புலவர்பெருமக்கள்சரித்திரங்களும் மடாலயகர்த்தர்களின் சரித்திரங்களும், சில கொடையாளர்சரித்திரங்களும் இடையிடையே தொடர்புடைமைபற்றிச் சுருங்கவுரையப்பெற்றுள்ளன.

இச்சரித்திரம் எழுதப்பெறுவிடில் நூற்றுக்கணக்கான இப்பெருந்தகையாளர்களுடைய பெயரும் அறியப்படாத நிலையில் அவர்கள் பெருமை விளங்குவதெப்படி? அன்னோர் சந்ததியோர்களும் அவர் முன்

ஞோர்களின் பெயர் புகழ்களை நிலைநாட்டிய ஐயரவர்களுக்கு நன்றிபாராட்டும் கடமைப்பாடுடையராவர்.

இடையிடையே நிகழ்கின்ற சம்பாஷணரூபமான கட்டுரைகள் பலவும் அவரவர் தகுதிக்கேற்ற இயற்கையான நிகழ்ச்சிகளையும் அவரவர் கொள்கைகளையும் வலியுறுத்தற்குரிய சொல்வன்மை வாய்ந்தனவாய் அமைந்துள்ளன. தமிழில் நல்ல வசனகாவியமில்லையென்னும் குறையை அறவே நீக்குதற்கு இது ஒரு வழிகாட்டியாயிருக்கிறது.

சாமானிய ஜனங்களே படித்துவக்கும்படியன்றிப் பண்டிதர்களும் படித்துப் பயனடைதற்குரிய விடயங்கள் பல இதில் அடங்கியுள்ளன.

வித்துவான்கள் அரசர்களை (செல்வர்களை)ச் சார்ந்து விளங்குகிறார்கள் என்று சிலர் சொல்வதுண்டு; அது தவறென்பதை இந்தச் சரித்திரம் காட்டுவதோடமையாது, நல்லவித்துவான்களைச்சார்ந்த செல்வர்களே விளங்குவார்கள் என்னும் உண்மையான முடிவையும் காட்டுகிறது. கம்பர் வில்லிபுத்தூரர் முதலான பெரும்புலவர்கள் சார்பால் செல்வமுள்ளோர்களில் ஓரொருவரே விளங்குகிறார்கள்; இக்கதாநாயகர் சார்புபெற்றமையாற் பல கனதனவான்கள் இச்சரித்திரத்தால் விளங்குகின்றனர்.

இதில் பலதிறப்பட்ட மனிதர்களினியல்பு பலவும் ஆங்காங்குப் படியெடுத்துரைப்பதுபோல் வரையப்பட்டுள்ளன. “படித்தவர்களுடைய திறமை பாடம் சொல்வதனாலேதான் விளங்கும்” என்றதுபோன்ற சில அருமையாயறியத்தக்க அநுபவசித்தமான பொருண்முடிபுகள் ஆங்காங்கு அறியக்கிடக்கின்றன. மடாதீன சம்பிரதாயம், சைவ சம்பிரதாயம் முதலான பல ஒழுக்க வழக்கங்கள் ஆங்காங்குப் புலப்படும்படியாகவும் இதனைப் படிப்பவர்களுக்குப் பலவகை உலகியலறிவுகளுண்டாகும்படியாகவும் விஷயங்கள் அமைந்துகிடக்கின்றன. ஆதீனவித்துவான்களாயுள்ளவர்கள், பரிசுபெறவிரும்பிவரும் சாமானியவித்துவான்களிடத்தும் ஆதரவுகாட்டி அபிமானித்தொழுகும் உத்தமகுணத்தை இது மெத்தவும் வெளியிடுகின்றது. ஆதீனகர்த்தர்கள் வித்துவான்களை ஆதரித்து அபிமானிக்கும் முறைகளும் புலப்படுகின்றன.

மாணாக்கர்கள் ஆசிரியரை வழிபட்டொழுகும் முறையும் பாடங் கேட்கும் முறையும் ஆசிரியரிடத்து அன்புடையாரயொழுகும் முறை யும், இடையிடையே விளங்குகின்றன. நல்லாசிரியர்கள் மாணவர்க ளிடத்து அன்புடையராய் அவர்க்கு வேண்டுவனபுரிந்து பாடங்கற்பிக் கும் இயல்புகளும் புலப்படும்.

இதில் பிரபுக்கள்விஷயமான பாடல்களோடு சைவநெறியும் சிவ பக்தியும், சிவனடியார்சிறப்பும் பற்றி இக்கதாநாயகர்பாடிய பாடல் களும் பலவுள்ளன. பிறர்பாடிய பாடல்களும் சிலவுள்ளன; அவையெல் லாம் கவிநயங்களறிதற்குரியன.

இச்சரித்திரம் நல்லாசிரியர்மாட்டு நன்றிபாராட்டுதல் என்னும் ஒ ருயர்குணமே உருவெடுத்துவந்தாற்போலமைந்துள்ளது.

ஒருவராற் பாடற்கியலாத அளவுகடந்த பலபிரபந்தங்களும், புரா ணங்களும் பலகற்பனைகளமையப்பாடித் தமிழ்மொழியை விளங்கவைத்த பெரும்புலமைவாய்ந்த பிள்ளையவர்களதுசரித்திரம் தமிழ்நாட்டிற்கு இன்றியமையாததொன்றே. அதனைத் தமிழபிமானிகளான நன்மக்க ளெல்லோரும் வாங்கிப் படித்துப் பிள்ளையவர்களுக்கும் ஐயரவர்களுக் கும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையராவர்.

இதனை ஆக்கியளித்த ஐயரவர்கள் இன்னும் பல பல்லாண்டுகள் இன்புற்றிருக்கும்வண்ணம் இறைவன் திருவருள் பாலிப்பதாக.

இதன் விலை:—முதற்பாகம் பக்கம் 380 அடங்கிய புத்தகம் 1-க்கு ரூ. 2—0—0. இரண்டாம் பாகம் பக்கம் 350 அடங்கிய புத்தகம் 1-க்கு ரூ. 2—0—0.

கிடைக்குமிடம்:— மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். வே. சாமிநாதையரவர்கள், தியாகராஜவிலாசம், திருவேட்டீசுவ ரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

௬

கருமகருத்தா.

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே'

என்னும் நன்னூற்சூத்திரத்திற்குச் சங்கரநமச்சிவாயர்கூறிய உரை ஓர் போலியுரையாகும். இந்நன்னூற்சூத்திரத்தையும்,

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே'

என்னும் தொல்காப்பிய முதனூற்சூத்திரத்தையும் ஒப்பநோக்கின், இருநூலாசிரியரும் கருதிய இலக்கணம் ஒன்றேயென்பதும், அவ்விருவர்கருத்தும் எவ்வாற்றானும் தம்முள் மாறுபடுவனவல்லவென்பதும் தெற்றென விளங்கும். தொல்காப்பியவுரையாசிரியர் எல்லாருமேயன்றித் தெய்வப்புலமை நக்கீரனாரும் சிவஞானமுனிவரும் பேராசிரியர் பரிமேலழகர் முதலிய ஏனைநூலுரையாசிரியரும் இலக்கணவிளக்கம் பிரயோகவிவேகம் இலக்கணக்கொத்து முதலிய நூலாரும், 'இல்லம் மெழுகப்பட்டது', 'சோறு அடப்பட்டது,' 'இல்வாழ்வான் எனப்படுவான்' என்றாற்போலச் செயப்பாட்டுவினைச்சொல்வாய்பாட்டான் ஓதற்பாலன, அச்செயப்பாட்டுவினைச்சொற்பொருண்மையையுணர்த்தும் படுவிகுதிதொக்கு 'இல்லம் மெழுகிற்று,' 'சோறு அட்டது,' 'இல்வாழ்வான் என்பான்' எனவரும் மரபுவழுவமைதியே அத் தொல்காப்பியச் சூத்திரத்தின் கருத்தாகக்கொண்டு தத்தம் உரைகளிலே குறித்தார்கள். அவ்வாறாகவும், நன்னூற்கு விருத்தியுரையெழுதிய சங்கரநமச்சிவாயர் இந்நன்னூற்சூத்திரத்திற்கு அவ்வுரையாசிரியர் எல்லாருடைய கருத்திற்கும் மாறாகப் புதுவதாக உரைகூறினார். அது வருமாறு:—

'செயப்படுபொருளை வினைமுதல்போலவைத்து அதன்மேல் அவ்வினைமுதல்வினையேற்றிச் சொல்லுதலும் வழக்கிடத்து உரித்தாம்' எ. று.

'வரலாறு:—இம்மாடு யான் கொண்டது. இச்சோறு யான் கொடுத்தது. இவ்வெழுத்து யான் எழுதியது.—எனவரும்.'

'உம்மையால் கருமத்தைக் கருத்தாவாக இவ்வாறுகூறுதலே யன்றிக் கருவி நிலம் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் அமையும் என்பது பெற்றும்.' இவ்வெழுத்தாணி யான் எழுதியது. இவ்வீடு யான் இருந்தது. இத்தொழில் யான் செய்தது. இந்நாள் யான் பிறந்தது.—எனவரும்.

'இனி, இல்லம் மெழுகிற்று, எழுத்தாணி யெழுதிற்று என உதாரணம் காட்டுவாரும் உளர். இல்லம் மெழுகிற்று—என்பதோர் வழக்கின்மையானும் நடத்த நடந்த தேரினைப்போல ஒருவன் எழுத எழுதியது எழுத்தாணியாதலின் அஃது அதன் தொழிலேயன்றி ஒருவன் தொழிலன்று ஆகலானும் அவை காட்டாகா என்க' எ. று.

இவ்வுரையின்படியே இவர்க்குப் பிற்பட்ட காண்டிகையுரை யாசிரியர் ஆறுமுகநாவலர்முதலியோரெல்லாம் உரையெழுதிச்சென்றார். சங்கரநமச்சிவாயர் நன்னூற்கு அரியவுரையெழுதிய பேரறிவாள ராயினும், இச்சூத்திரவுரையிற் கூறியதுமாத்திரம் தம் ஆசிரியர் கருத்தொடு மாறுபட்டது. 'நூலுரை போதகாசிரியர் மூவரும் முக்குணவயத்தான் முறைமறந்தறைவரே' என்னும் தம் ஆசிரியர் கூற்றுக்குத் தாமும் சான்றுயினர்; அதுவியப்பே. இப்பால், இருவர் மாறுகோள் ஒருதலைதுணிவு என்னும் மதம்பற்றி யாம் இவ்வுரையினை ஆராயப்புக்குழி, இவரது உரையிலே கண்ட பெரும்பிழைகள் சில. அவற்றுள்,

1—வினையாலணையும்பெயரது இலக்கணத்தை இவர் நன்கு ஆராயாமை.

2—எழுவாய்ப்பயனிலைமுடிபு நன்குணர்ந்து கொள்ளாமை.

இவர் உரையிற் காட்டிய உதாரணங்களிலே 'கொண்டது', 'கொடுத்தது', 'எழுதியது,' 'இருந்தது,' 'செய்தது,' 'பிறந்தது' என்னும் இவையெல்லாம் வினையாலணையும்பெயர்வாய்பாட்டில் வந்தனவே. ஒன்றேனும் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய வாய்பாட்டிற் காட்டப்படவில்லை. இனி,

வினையாலணையும்பெயரது இலக்கணம்.

இஃது ஓர் அரிய இலக்கணம். நன்னூலளவே பயின்றார்க்கு இஃது உணரலரிது. வினையாலணையும்பெயர் என்பது நன்னூல்வழக்கு. வினைப்பெயர் என்பது தொல்காப்பியவழக்கு. பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து முதலிய நூல்வழக்கு வினைமுற்றுப்பெயர் என்பது.

வினையாலணையும்பெயர் (வினைப்பெயர்) என்பது வினையடியாகப் பிறந்த பெயர் என்பதாம். இது வினைச்சொற்பாகுபாடாகிய செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்னும் ஆறனுள்ளும் அடங்கும். ஏனைப்பெயரோ பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் பாகுபாட்டினுள் அடங்கும். சங்கநூலுரையாசிரியர் பலரும் இவ்வினையாலணையும்பெயர்வகையினைப்பற்றி ஆங்காங்கு விளக்கிச்சென்றனர். தொல்காப்பிய வுரையாசிரியருள் நச்சினார்க்கினியரும், 'பெயர்நிலைக்கிளவி காலந் தோன்றா—தொழினிலை யொட்டும் ஒன்றலங் கடையே' என்னும் சூத்திரவுரையுள் இதனைச் சிறிது விரித்துணர்த்தினார். 'உண்டவன்' 'உண்பது' என்பன வினைமுதன்மேல் நின்ற வினைப்பெயர் எனவும், 'அவன் ஏறிற்றுக் (ஏறியது) குதிரை', 'கொலைவர் கொடுமரம் தேய்த்தார்', 'யான் சொன்னவன் (இவன்)' என்பவை செயப்படுபொருண்மேல்நின்ற வினைப்பெயர் எனவும் கூறிப் பிறவாறு வருவனவும் காண்கவென்றார். ஈண்டு வினைமுதன்மேல் நின்ற வினைப்பெயர் எனவும், செயப்படுபொருண்மேல்நின்ற வினைப் பெயரெனவும் உரைக்கப்பட்டதன்கருத்தை உய்த்துணர்ந்துகொள்ளல் வேண்டும். உண்பவன் உண்பது என்பவை, முடிக்கும்சொல் எதனையும் நோக்காமல், (எனவே ஓர் வாக்கியநிலைமையிலேயன்றித் தனியாக நின்றநிலைமையிலே) உண்டல்வினைக்குக்கருத்தாவாகிய ஒருவனையும் ஒரு விலங்கினையும் குறித்தன. 'அவன் ஏறிற்றுக் குதிரை', 'கொலைவர் கொடுமரந்தேய்த்தார்', 'யான் சொன்னவன் இவன்', 'உண்பவை நாழி' என்புழி ஏறுதல் தேய்த்தல் சொல்லுதல், உண்ணுதல் ஆகிய வினைகளுக்குச் செயப்படுபொருள் யாவையோ அவையே குறிக்கப்பட்டன. ஈண்டு. ஏறிற்று, தேய்த்தார் சொன்னவன், உண்பவை என்பன வினையாலணையும்பெயர் இலக்கணத்தால் செயப்படுபொருண்மேல்நின்றன. வாயினும் தொடர்மொழி(வாக்கிய) நிலைமையிலே முதல் வேற்றுமைக்

கருத்தாவாகநிற்றல்காண்க. இனி, இவையே உண்பவற்றை உண்பவற்றால் என்றாற்போலப் பிறவேற்றுமையுருபுகளை ஏற்றுநிற்கும் நிலையையும் அறிந்துகொள்க.

பிரயோகவிவேகநூலார் இவ்வினையாலணையும்பெயாது இலக்கணத்தை நன்குணர்ந்து,

'திருநுத லாய்கருத் தாவாதி யாதல் இச் சேர்ந்திறுதல்
ஒருபெயர்ச் சொல்லெனச் சுப்பேறி நீங்கல் உருபுபெறல்
பொருவரும் ஈற்றயற் கேருப பேதம் பொருந்தலொடு
வருவினை முற்றுப் பெயர்தாம் கிருதந்தம் வண்டமிழ்க்கே'

என்னும் காரிகையில் வகைப்படுத்தியோதினர். இவர் செய்பவன் கருவி நிலம் செயல் காலம் என்னும் அறுவகையுள் காலம் ஒன்றனையும் ஒழித்து ஏனை ஐந்தன்மேலும் வினையாலணையும்பெயர் வருமென்பர்.

அவர் அவற்றிற்கு உதாரணம் காட்டியவாறு:—

(1) கருத்தாவின்மேல்நின்ற வினைமுற்றுப்பெயர்:—'தார் தாங்கிச் செல்வது தானை', 'வினையே செய்வது'

(2) செயப்படுபொருண்மேல்நின்ற வினைப்பெயர்:—'உடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக் கெடும்' (உடுக்கப்படுவது-உண்ணப்படுவது)

(3) வினைமேல்நின்ற வினைமுற்றுப்பெயர்—'உறங்குவது போலும் சாக்காடுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு' ஈண்டு உறங்குவது விழிப்பது என்பன கருத்தாவின்மேல் நில்லாது உறங்குதல் விழித்தல் என்னும் வினைமேல் நின்றமை காண்க.

(4) கருவியின்மேல்நின்ற வினைமுற்றுப்பெயர்—'வேலன்று வென்றி தருவது....மன்னவன் கோல்'

(5) இடத்தின்மேல்நின்ற வினைமுற்றுப்பெயர்—'யாம் இருப்பது உறையூர்', 'பற்றியார் வெல்வதரண்', 'ஆற்ற விளைவது நாடு'

இப் பிரயோகவிவேகநூலார்கூறியபடியே இலக்கணக்கொத்து நூலாரும்,

'வினைமுற்றுப்பெயர் விரிக்குங் காலே
வினைமுதல் செயப்படு பொருளே கருவி
இடமே தொழிற்பெயர் இவ்வைந் தன்றியும்
... ...
இன்னும் பலவகை யெனவிளம் பினரே'

என்னும் சூத்திரத்தில் ஓதினர். இவ்விருநூலாரும் வடமொழிநூல் வல்லாராதலின் அந்நூல்வழக்கில் இவ் வினையாலணையும்பெயாது இயல்பு விரிந்தமைந்தவாறே தமிழ்நூல்வழக்கினும் அமைந்திருத்தலைக் கண்டு இலக்கணம் விரித்தோதினர்.

சிவஞானபோதம் சூ 4. 2. திரோதகம் என்னும் வடமொழி மறைத்தலைச்செய்வது என்னும் பொருட்டாய் வினைமுதன்மேல்நின்ற வினைப்பெயர் என்று சிவஞானமுனிவர் கூறியதும் இவ்வரிய இலக்கணம்பற்றியே.

இனி இவ்வரிய இலக்கணப்பாகுபாடுகள் இயல்பாகவே தமிழ் வழக்கில் அமைந்திருப்பதனை அடியிற்கண்ட உதாரணங்களாலும் எளிதின் அறிந்துகொள்க.

(1) ஊர்வன பறப்பன நீர்வாழ்வன — வினைமுதன்மேல்நின்ற வினையாலணையும்பெயர். 'பழிப்பனபகரேல்' என்பதும் அது.

(2) உண்பன, தின்பன, பருகுவன—செயப்படுபொருண்மேல் நின்ற வினைப்பெயர். 'ஆறுவதுசினம்', 'காப்பதுவிரதம்', 'கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்' என்பவும் அது.

(3) கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன, எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன–கருவியின்மேல்நின்ற வினையாலணையும்பெயர்.

(4) 'ஓதுவதொழியேல்'-வினைமேல்நின்றவினையாலணையும்பெயர்

(5) 'யாம் விளையாடுவது இச்சோலை' —இடத்தின்மேல்நின்ற வினையாலணையும்பெயர். 'நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே' (தேவாரம்) என்பதும் அது.

இனிக் காலத்தின்மேல்நின்ற வினையாலணையும்பெயரும் உண்டெனக்கொள்க. (உதாரணம்) நாழிகை அறுபதுகொண்டது ஓர் நாள். வைகறைக்கும் நண்பகற்கும் இடைப்பட்டது எற்பாடு.

இத்துணையும் விரிந்தது வினையாலணையும்பெயரது இலக்கணம். இனி ஆராய்வது, சங்கரநமச்சிவாயர்காட்டிய 'இம்மாடு யான் கொண்டது' என்னும் தொடர்மொழி முடிவு.

இத்தொடர்மொழியில் வந்த 'கொண்டது' என்னும் சொல் வினையாலணையும்பெயரே; வினைமுற்று அன்றென்று முன்னமே குறித்தாம். பெயர்ச்சொற்குப் பொதுவிலக்கணமாவன: வேற்றுமையுருபேற்றலும் பயனிலைகோடலும் காலந்தோன்றாமையுமாம். வினையாலணையும்பெயர்க்கு உருபேற்றலும் பயனிலைகோடலும் காலந்தோன்றநிற்றலும் இலக்கணமாம். 'இம்மாடு யான் கொண்டது' என்புழிக் 'கொண்டது' என்பது சொன்னிலைமையிற் செயப்படுபொருண்மேல்நின்றது; தொடர்மொழி நிலைமையிற் கருத்தாவாகநின்றது; ஐமுதலிய உருபு ஏலாமையால் யான் என்பதும் கருத்தா (எழுவாய்). அது கொண்டது என்னும் வினையாலணையும்பெயருள் கொள் என்னும் வினைமுதனிலையோடு முடிந்தது. அப்பால், 'யான்கொண்டது' என்பது ஒருசொன்னீர்மை எய்தித் தானும் எழுவாயாகநின்று இம்மாடு என்னும் அடையடுத்த பெயர்ப் பயனிலைகொண்டுமுடிந்தது. இவ்வாறன்றி, இம்மாடு என்பது எழுவாயாக நின்று யான்கொண்டது என்னும் பெயர்ப்பயனிலைகொண்டுமுடிந்தது எனினும் அமையும்; 'ஆ பல' என்புழிப்போல. அற்றேல், 'யான் கொண்டது' என்புழித் தொகையின்மையின் அஃது ஒருசொன்னீர்மை எய்துதல் யாண்டையதோவெனின், (வேற்றுமைத்தொகை முதலிய) தொகையல்லாத தொடர்மொழியும் ஒரோவழி 'இரும்பு பொன்னாயிற்று' (பெயர்நிலைக்கிளவி காலந்தோன்று) என்றாற்போல ஒருசொன்னீர்மை யெய்துதலுடையவென்று 'எல்லாத்தொகையும் ஒரு சொன்னடைய' வென்னும் சூத்திரவுரையுள் சேனாவரையர்கூறியவாற்றான் அமையும் என்க. திருக்கோவையாரில் 'பாயினமேகலை' முதலிய சொற்றொடர் களை ஒருசொன்னீர்மைப்படுத்தி முடிபுகாட்டிய பேராசிரியர்க்கும் இதுவே கருத்துப்போலும்.

இனி யான் என்னும் எழுவாய்க்கு முடிபு 'கொண்டது' என்னும் வினையாலணையும்பெயர் என்று கொள்ளின் இழுக்கென்னையோ? அதனைக் 'கொள்' என்னும் வினைமுதனிலையோடு முடித்துக்காட்டுவதென்னையோ? எனின், நன்றுவினாயினாய்; எழுவாய்வேற்றுமைப்பெயர்க்கு முடிபுகூறிய,

'பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே'

என்னும் சூத்திரத்துள் வினையாலணையும்பெயரையும் அடக்கிப் பொது வகையால் 'வினைச்சொற்கோடல்' என்று ஓதாது 'வினைநிலையுரைத்தல்' என்று ஓதியதனால், ஆசிரியர்க்கு இவ்வாறு வினை முதனிலையோடு முடித்துக்காட்டுதலே கருத்தாம் என்க. 'சாத்தன் காலொடிந்தான்' என்புழிச் சாத்தன் என்பது முதல், கால் என்பது சினை. ஒடிதல் என்பது சினையின்வினையே; ஆயினும் கால் என்னும் எழுவாய் ஒடிந்தான் என்னும் முற்றுவினையோடு முடியாது, ஒடிந்தான் என்பது சாத்தன் என்பதற்குப் பயனிலையாகநிற்ப, கால் என்பது ஒடிந்தான் என்பதனுள் ஒடிதல் வினையோடு முடிந்ததெனப்படும். 'சாத்தன் கண்பெரியன்' என்புழிக் கண் என்னும் சினைபெழுவாய், 'பெரியன்' என்னும் முதலெழுவாயை முடிக்குஞ் சொல்லுள் 'பெருமை' யென்னும் பண்பைக்கொண்டுமுடியும். அப் 'பொருண்மைசுட்டல்' என்னும் சூத்திரத்தில் 'பண்பு கொளவருதல்' என்று ஆசிரியர் கூறியதும் இக்கருத்துப்பற்றியேயாம்.

'உடல்சிறியர்' (மூதுரை), 'உறுகால் பிறர்க்கரியோன்' (கோவை) 'மன நல்லர்' (குறள்) என்பனவற்றின் முடிபும் அது. இவ்வாறு சினையின்வினையென்று வேறுபிரித்து முடிபுகொள்ளாக்கால், இவற்றைச் சினையின்வினை முதன்மேல்நின்றதென்னும் வழுவமைதியிலக்கணத்தால் முடிப்பதும் கூடாதாம்.

'சாத்தன் உண்டான்' என்றாற்போலப் பயனிலை விதிவினைமுற்றாக உள்ளவிடத்துமாத்திரம் சாத்தன் என்னும் எழுவாய் உண்டான் என்னும் முற்றுவினையைக் கொண்டு முடிந்தது என்னலாம். இதற்குத் தனி விதி,

'அவைதாம், தத்தங் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர் முடிபி னவே'

என்னும் சூத்திரம். 'சாத்தன் உண்ணான்' என்புழி முற்றிநின்றதென்பதற்குரியதோர் வினையென்பதே இன்மையின், ஈண்டுச் சாத்தன் என்னும் எழுவாய் 'உண்ணான்' என்பதனுள் உண்ணுதற்றொழிலோடு முடிந்ததெனப்படும்.

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது'
'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே'
'வினையின் றொகுதி காலத் தியலும்'

என்னுஞ் சூத்திரங்களில் வந்த 'வினை' யென்பதெல்லாம் வினைச்சொல்லின் முதனிலையைக் குறித்தவாறு சேனாவரையர் சிவஞானமுனிவர் பரிமேலழகர் பேராசிரியர் முதலியோர் உரைகளான் அறிக.

'சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே' என்பதனுள் சார்ந்து என்னும் வினையெச்சம் வரல் என்னும் தொழிற்பெயரின் 'வா' என்னும் முதனிலையோடு முடிந்தது என்பது சூ. வி. சிவஞானமுனிவர் உரை.

'அலர்நாண ஒல்வதோ' (குறள்) என்புழி நாண என்னும் வினையெச்சம் ஒல்வது என்னும் தொழிற்பெயருள் ஒல்லுதற்றொழிலோடு முடிந்தது.

'ஆகி—ஆகிய' (பரி–13) ஆகி யென்னும் வினையெச்சம் ஆகிய என்னும் பெயரெச்சத்துள் ஆதலோடு முடிந்தது. எ—து பரிமேலழகருரை.

'நல்வினையுங்நயந்தந்தின்று' (கோவையார்) என்புழித் துப்புற என்னும் வினையெச்சம் தந்தின்று என்பதனுள் தருதல் என்பதனோடு முடிந்தது—எ—து—பேராசிரியருரை.

'வினைசார் பினமிடம் மேவி விளங்காப், பலபொருள் ஒரு சொல்' (நன்) என்புழி மேவியென்னும் வினையெச்சம் விளங்கா என்பதன்கண் முதனிலையோடு முடிந்தது எ—து சங்கர—உரை.

இவ்வாறன்றி எழுவாயை வினையெச்சம் பெயரெச்சம் வினையாலணையும்பெயர் தொழிற்பெயர் இவற்றோடு முடித்துக்காட்டுவாரும் உளர். அஃதெல்லாம் ஒற்றுமைநயம்பற்றி உபசாரத்தாற் கூறிய தென்றொழிக. 'சாத்தன் உண்டு சென்றான்' என்புழிச் சாத்தன் என்னும் எழுவாயை, உண்டு என்னும் வினையெச்சம் முடிக்காமல், சென்றான் என்னும் வினைமுற்று முடிக்கும் நிலைவேறுபாடும் கண்டு கொள்க. எனவே, 'யான் கொண்டது' என்புழி யான் என்னும் எழுவாய் சொல் என்னும் முதனிலையோடு முடிந்து அப்பால் 'யான்

கொண்டது' என ஒருசொன்னீர்மையெய்தி வேறோர் பயனின்மை அவாவிநின்றமை காண்க. அப்பயனிலைதான் 'இம்மாடு' என்பது.

'முனைவன் கண்டது முதனூலாகும்' என்பதற்கும் இம்முடிபு ஒக்கும். இவையெல்லாம் வழாநிலைமுடிபே; வழுவமைக்கவேண்டுவனவல்ல.

இனி, 'என்னாற் கொள்ளப்பட்டது' என்பது 'யான் கொண்டது' எனவும், 'முனைவனாற் காணப்பட்டது முதனூல்' என்பது 'முனைவன் கண்டது முதனூல்' எனவும் வரப்பெறுதலே இச் 'செயப்படுபொருளைச் செய்ததுபோல' என்னும் சூத்திரத்தின் கருத்தாகக்கொள்ளாமோ வெனின், கொள்ளாம். அவ்வாறு கொள்ளுதல் பிரயோகவிவேகநூலார் கருத்தாம். அதுவும் பொருந்தாதென்று முன்னமே மறுக்கப்பட்டது. சங்கரநமச்சிவாயர்க்கும் அது கருத்தன்று; ஆகையால் அதுபற்றி ஈண்டு ஆராய்ச்சி வேண்டா.

இனி, சங்கரநமச்சிவாயர் இச்சூத்திரத்திற்குப் பொழிப்புரை கூறியவாறு—'செயப்படுபொருளைக் கருத்தாவைப்போலவைத்து அதன்மேல் வினைமுதல்வினையேற்றிக் கூறுதலும் வழக்கின்கண் உரித்தாம்' என்பது. இதுபற்றி ஆராய்வாம். இதுவே நன்னூலார்க்குக் கருத்தாயின், 'செயப்படுபொருளைச் செய்ததன் தொழிற்பட, முடித்தனர் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே' என்று சூத்திரப்பொருள் இனிது விளங்க ஓதுவர். 'செய்ததுபோல' என்று ஓதியதனால் உதாரணவாக்கியத்துள் செய்தவினைமுதல் (சுதந்தாகருத்தா) வாராதென்பது போதரும். 'இம்மாடு யான் கொண்டது' என்புழி கொள்ளுதல் வினைக்குச் சுதந்தரகருத்தாவாகிய யான் என்பது அமைந்துள்ளது; ஆதலின் 'செய்ததுபோல' என்பது பொருத்தமில்கூற்றாம். 'செய்தது போல' என்பதற்குக் கருத்தாவைப்போலவைத்து, எனப் பொருள் கொள்ளினும் 'அதன்மேல் வினைமுதல்வினையேற்றிக்கூறுதலும்' என்பதற்குச் சூத்திரத்திற் சொல் அமைந்திலது. இனி, 'சாத்தன் கண்ணொந்தான்' என நோதல் ஆகிய சினையின்வினையை முதன்மேல் ஏற்றிக்கூறினாற்போல 'இம்மாடு யான்கொண்டது' என்பதும்

முடிந்ததென்று கருதினர்போலும் எனின், அற்றேல், யான் என்னும் உயர்திணைச்சொல்லோடு மாடு என்னும் அஃறிணைச்சொல் ஒருங்கு முடிந்த வழுவமைதியாகும். ஆசிரியர் தொல்காப்பியனார்க்குச் 'செயப்படுபொருளைச் செய்ததுபோல' என்னும் சூத்திரத்தால் அவ்வழுவமைப்பது கருத்தாயின், ஏனை வழுவமைப்போதிய கிளவியாக்கத்துள்ளே அச்சூத்திரத்தை வைப்பர். அவ்வாறன்றி அவர் வினையியலுள்ளே அச்சூத்திரத்தை வைத்து ஓதியவதனால் ஒரு வினைச்சொல் வாய்பாட்டாற் கூறவேண்டியதை வேறொருவாய்பாட்டாற்கூறும் வழக்குவழுவமைப்பதே அவர்க்குக் கருத்தாம். முதனூலாசிரியர் கருத்து அதுவாக வழிநூலாசிரியர்க்கும் அதுவே கருத்தாம். அது வன்றியும் 'இல்வாழ்வான் என்பான்' என்றாற்போல வருவனவற்றிற்குச் சங்கரநமச்சிவாயர் இலக்கணவிதி ஏதும் காட்டினரிலர். ஆதலின் எவ்வாற்றானும் கருமகருத்தா என்பது பற்றி அவர் கூறிய உரையெல்லாம் போலியுரையென்பதும் சேனாவரையர் முதலியோர் கூறிய உரையே உரையென்பதும் துணிந்துகொள்க.

இனி அவர் கருவி கருத்தா என்பதற்கு 'இவ்வெழுத்தாணி யான் எழுதியது' என்பதை உதாரணமாகக்காட்டிக் கூறியதும் பிறவும் அவ்வாறே போலியுரையாதல் அறிக.

இதனால் அச்சங்கரநமச்சிவாயருரையின்படியே காண்டிகையுரையெழுதிய ஆறுமுகநாவலர் முதலியோர் உரையும் போலியுரையாதல் சொல்லாமலே அமையும் என்க.

ம. நா. சோமசுந்தரம்பிள்ளை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கரு௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பிலம்நீங்குபடலம்.

(பிலம்-குகைபோல நிலத்தின்கீழ் உள்ள அறை.)

அநுமாநாதியோர் வழிச்செல்கையில் ஒரு பாலைவனத்திலிருந்த பிலத்துட்புகுந்து வெளிவந்ததைக் கூறுவது.

அனுமான்முதலிய தலைவர்கள் சேனைகளுடன் செல்லுதல்.

[அனுமான்முதலிய வானரவீரர்கள் சுக்கிரீவன் சொன்ன தானங்களிலே விந்தமலை முதலாக ஏமகூடமலை யிறுதியாக உள்ள இடங்களில் சீதையைத் தேடிக்கொண்டு சேனைகளுடன் சென்றார்கள்.

பல இடங்களில் சீதையைத்தேடி மகேந்திரமலைக்குவரும்படி சேனைகளை அனுப்பிவிட்டுத் தலைவர்கள் தனியே செல்லும்போது ஒரு பிலத்துட் புகுதல்.

ஏமகூடமலையை நீங்கியபோது, சேனைகளைப் பல கூறுகளாகப் பகுத்துப் பல இடங்களிலும் சீதையைத்தேடி முடிவில் மகேந்திரமலைக்குவந்து தங்களைச் சந்திக்கும்படி அனுப்பிவிட்டு, அத்தலைவர்கள், வழிச்செல்கையில், நீரென்னும் பேருமில்லாமல் காய்ந்ததாயும் சூரியனும் அஞ்சும் சூடுள்ளதாயும் இருந்த ஒருபாலைவனத்தைச் சேர்ந்தார்கள். அதன் கொடிய சூட்டினால், தரையில் தாளூன்றமாட்டாது தாவிக்குதித்துச் சுட்ட சட்டியிலிருந் தெழுகின்ற நெற்பொரிகள் போலத் துள்ளித் துடித்து, ஒதுங்க நிழல்காணாது தவித்து, இனி உயிர் நிலையாதென் றெங்கும் சமயத்தில் ஒரு பிலத்தைக்கண்டு, இதனுள் நுழைந்து இச்சூட்டுக்குத் தப்பிப் பிழைப்போமென்று அதனுள்ளே புகுந்தார்கள். புகுந்தவர்கள், அதன் உள்ளிடத்தை அடைந்தபோது, அங்குள்ள பேரிருள் மூடிக்கொள்ள, வந்தவழியும் போம்வழியும் தெரியமாட்டாது மயங்கித் தியங்கினார்கள். அங்கதன்

முதலியோர், இனி இப்பிலத்தினின்று வெளியேறுமாறில்லை, இங்கேயே இறந்துவிடுவோமென்றேங்கி 'அநுமானே, நீ எங்களைக் காக்கவல்லையோ?' என, அவன் 'அஞ்சாதீர்கள், நான் உங்களைப் பிழைக்கச்செய்வேன். என் வாலைப்பற்றி, விடாது தொடர்ந்துவாருங்கள்' என்று, வழியைக் கையால் தடவிக் கண்டுகொண்டும் காலால் நடந்துகொண்டும் கடந்து சென்றான்.

அவர்கள் அந்தப் பிலத்தினுள்ளே ஒரு நகரத்தைக் காணல்.

அவர்கள் இவ்வாறு நெடுந்தூரம் சென்றபோது, படிப்படியாக இருள் நீங்க, முடிவில், சூரியமண்டலம் பூமிக்குள்ளே ஒரு மறைவிடம் தேடி உறைவதுபோன்ற தேசோமயமான நகரமொன்று காணப்பட்டது. அது, சோலைகளும் தடாகங்களும் மலியப்பெற்றுப் பொன்னாலும் மணியாலும் புனைந்தியற்றப்பட்ட மாடவரிசைகளையுடையதாய்ச் சூரியப்பிரகாசம் வேண்டாது சுயம்பிரகாசமுள்ளதாய், இந்திரநகரும் இணையிலாததாய்க் குலோத்துங்க (?*) சோழனைப் பாடிப் பரிசுபெற்ற புலவர்மனைகள்போல எங்கும் பொற்குவியல்களும் விலைமிக்க ஆடையாபரணங்களும் அமிழ்தமனைய அன்னம் முதலிய அறுசுவையுண்டிகளும் இனிய கனிவகைகளும் கலவைச்சந்தனமும் பூமாலைகளும் நிறையப் பெற்றதாயிருந்தது.

அவர்கள் அந்நகருட் புகுந்து, மற்றெல்லாமிருந்தும் மனிதரில்லாமைகண்டு மயங்கல்.

அவர்கள் அந்நகரத்துள்ளே புகுந்து, இந்நகர் இராவணனது இலங்கையாயிருக்குமென்றெண்ணிச் சீதையைக் காணலாமென்று மகிழ்ந்து தேடினார்கள். அங்கே, எங்கேயும் சித்திரங்களிலும் சிலைகளிலுமுள்ள செயற்கைமனுடரன்றி இயற்கைமனுடரெவரையுங் கண்டிலர். மனிதர்நுகர்பொருள்யாவும் மலிந்திருந்தும் மனிதரில்லாத மாயம் என்னோவென்று திகைத்து 'இந்நகர் பாதாளத்திருத்தல்பற்றி நரகமென்னலாகாது; விண்ணில் இராததாயினும் முழுதும் பொன்மயமாய்ச் சகல போக்கியப்பொருள்களும் நிறைந்திருத்தலால் சுவர்க்கமென்ன

---

* ஸ்ரீசடகோபராமாநுஜாசாரியர் உரையைப் பார்க்க.

லாம்; என்றால், இறந்தவரன்றோ சுவர்க்கமடைவர், இதனை அடைந்திருக்கின்ற யாம் இறக்கவில்லையே; அன்றியும், சுவர்க்கவாசிகள் இமையாதவர்கள், நாமோ இமைக்கின்றோம்: ஆகவே, இந்நகர், நரகமாயிராததுபோலச் சுவர்க்கமாயுமில்லை; இதன் உண்மைத்தன்மை இன்னதென்று தெரியவில்லை' என்று தம்முள்ளே கூறித் திகைத்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது, சாம்பவான், 'இது வேறென்றுமில்லை; சீதையைக் கவர்ந்தொளித்த கள்வன் அவளைத்தேடும் நாம் உள்ளே புகுந்து வெளியே வரவொட்டாதபடி வஞ்சகமாகச் செய்துவைத்த மாயப்பொறியே. யாம் இதனுள் அகப்பட்டுக்கொண்டோம். இனி யிங்கே இறந்தொழிவதே நமது தலைவிதி' என்றான். அநுமான், அவனைத் தேற்றுவானாய் 'இந்தப் பிலம் வெளியேறக் கூடாததாயிருந்தால், நாம், முன்னாளில் சமுத்திரத்தைத்தோண்டிய சகரரினும் அதிகமாக ஊக்கங்கொண்டு இப்பிலத்தைச் சூழ்ந்திருக்கும் பூமியைத் தோண்டிக்கொண்டு வெளியேறுவோம். இராக்கதர் எதிர்ந்தாரேல், அவர்களை அழித்துவிடுவோம்' என்றான். அது கேட்டு, எல்லாரும் சஞ்சலந்தவிர்ந்து தைரியமடைந்தார்கள்.

அவர்கள் அந்நகரில் தவஞ்செய்துகொண்டிருந்த சுயம்பிரபையென்னும் தேவமாதைக் காணல்.

பின்பு, அவர்கள் அந்நகரத்தில் சீதையைத் தேடித்திரியும்போது, அதன் நடுவிலே, மாதவமே வடிவுகொண்டாற்போன்று பேரழகுபடைத்த பெண்ணொருத்தி, தலைமயிர் சடைமுடியாகித் தரைமீது தாழ்ந்து படிந்துகிடக்கக் கண்கள் பாதிமூடி அரைக்கண்பார்வையாக மூக்குநுனியை நோக்கியவண்ணமாகவிருக்கச் சரீரம் சாயாது சலியாது தம்பம்போல நேராக நிமிர்ந்துநிற்கப் புறங்கைகள் தொடைகளில் பொருந்தியுற, அகங்கைகள் அலர்ந்த தாமரைபோல் மேல்நோக்கி விளங்கத் தவநிட்டையிலிருந்தவளைக் கண்டு தண்டம்பண்ணினார்கள்.

சுயம்பிரபை வரலாறு.

அநுமானை மற்றுமவர்கள் 'இவள் சீதையோ? அல்லளோ? தெரிந்து சொல்லு' என வினவ, அவன், 'இவள் சீதையல்லள்: சங்குமணிவடத்துக்கும் முத்துமாலைக்கும் உள்ளவித்தியாசம் இவளுக்கும் அவளுக்கும் உண்டு' என்றான். அப்போது, அந்தத் தவமாது நிட்டைகலைந்து,

அவர்களைக் கண்டு, தன் தவத்துக்குத் தடையாக அவர்கள்வந்தது தகாதசெயலென்று கோபங்கொண்டு 'இங்கே ஏன்வந்தீர்கள்?' என்றாள். அவர்கள் 'இராமபிரான்மனைவி சீதையை இராவணன் கவர்ந்து ஒளித்து வைத்திருக்கிறான். நாங்கள் அவளைத் தேடித் திரியும் இராமதூதர்கள்' என்றார்கள். எனவே, அவள், அடங்கா மகிழ்ச்சிகொண்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, எழுந்து, இன்பக்கூத்தாடி 'என் அருட்பெருனவர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக' என்று கூறி 'எம்பெருமான் எங்கெழுந்தருளியிருக்கின்றான்?' என, அனுமான் இராமன் வரலாறு முழுவதையும் கூற, அவள் 'என்தவம் இன்று பலித்தது. யான் சாப விடுதலைபெற்றேன்' என்று மகிழ்ந்து கூறி, அவர்களை நீராடச்செய்து, அமுதுசெய்வித்து, சந்தனம் பூமாலை தரிப்பித்து, இன்சொற்கூறி உபசரித்தாள். அப்போது, அனுமான் 'இந்நகர்க்கு இறைவன் யாவன்? உன்பேர் யாது?' என்று வினவ, அவள் 'இந்நகர் அசுரத்தச்சனான மயனுக்குப் பிரமனால் அளிக்கப்பட்டது. என்பெயர் சுயம்பிரபை. மயன், தேவமாதருள் ஏமை யென்பவளைக் காதலித்தான். அவள் என் உயிர்த்தோழி. அவளும் அவனைக் காதலித்ததனால், அவன் வேண்டுகோளின்படி, இங்கே, அவன்பின்னே அவளைக் கூட்டிக்கொண்டுவந்து சேர்த்தேன். அவர்கள் அன்றிற்பறவைகள்போல இணைபிரியாது இன்புற்று வாழ்ந்தார்கள். என் தோழிமீதுள்ள அன்புமிகுதியால் அவளைப் பிரியமாட்டாமல் யானும் இங்கே வாழ்ந்திருந்தேன்.

சிலகாலஞ்சென்றபின், ஏமையைத் தேடி யிங்கே வந்த இந்திரன், மயனைக் கோபித்து "உன்னைக் கொல்லாது விடுகிறேன். உயிர் பிழைத்துப்போ" என்று போகவிட்டு, ஏமையையும் சினந்து "நீசெய்தது தவறு. நடந்தது முழுவதையும் ஒளியாமற்சொல்" என, அவள் சொல்ல, என்னை நோக்கி "என் நகரினின்று இவளைக் கடத்திய நீ, இந் நகரைக் காவல்செய்திருக்கக்கடவை" எனக் கோபமாகச் சாபமிட்டான். நான் வணங்கிச் "சாபவிமோசனம் செய்தருள்க" என்று இரந்தபோது "இராமதூதர் இங்கேவந்தபோது உன்சாபம் நிவிர்த்தியாம்" என்று சொல்லிவிட்டு ஏமையுடன் தேவலோகம் சென்றான். இங்கே உண்ணவும் உடுக்கவும் பூணவும் பூசவும் உரிய பொருள்கள் நிறையவிருந்தும் யான் எதனையும் தீண்டலுஞ்செய்யேனாய், உங்களைக் காணவேண்டி நெடுங்காலம் தவங்கிடந்தேன்; உங்களைக் காணப்பெற்றதனால், என்சாபம்

திரப்பெற்றேன். இனி, இப்பிலத்தினின்று வெளியேறும்விதமறியேன்' என்று கூறினாள். அநுமான் அவளை வணங்கி 'அன்னையே! உன்னைப் பொன்னுலகிற் சேர்ப்பேன்' என்றான்.

அநுமான் பேருருவங் கொண்டு பிலத்தைப் பிளத்தல்.

அப்போது, மற்றைய வானரவீரர் 'எங்களை இந்தப்பிலத்தில் இறந்தொழியாமற்காத்த பெரியோனே! இதனினின்று வெளிபேறவேண்டியதைப் புரிவாயாக' என, அவன் 'நடுங்காதீர்கள்' என்று சொல்லிக்கொண்டு, கண்டோர் நடுங்கும் பேருருவங்கொண்டு, தலை பிலத்தின் உச்சிப்பாகத்தையும் கைகள் மற்றைப்பாகங்களையும் பிளந்து திறக்கச் செய்வனவாக, வான்மவரையும் வளர்ந்துநின்றான். திருமால் திரிவிக்கிரமாவதாரமெடுத்தபோது அவன் திருவடிக்குள் ளடங்கிய பூமியும் வானமும் அநுமானது வடிவத்துக்குள்ளும் அடங்கியதனால், இதன் முன் திருமாலின் (அவதாரமான இராமனது) திருவடித்தானமானதனால் திருவடியெனப் பேர்பெற்ற அவன், இப்போது திருமாலின் திருவடிக்கு உவமையானதனால் திருவடியென்னும் பெயரைத் திரும்பவும்பெறுதற் குரியவனானான்.

சுயம்பிரபை சுவர்க்கம் செல்ல, வானரவீரர் வழிநடந்து ஒரு பொய்கைக்கரை அடைதல்.

பின்பு, அநுமான் அங்கரத்தை வேரோடு பிடுங்கி மேற்றிசைக் கடலில் எறிந்துவிட்டுச் சுயம்பிரபையுடனும் அங்கதனாதியோருடனும் வெளியேறினான். சுயம்பிரபை சுவர்க்கம்நோக்கிச் சென்றாள். வானரவீரர் எஞ்சியிருந்த பகற்பொழுதுமுழுதும் வழிநடந்து ஒரு பொய்கைக்கரையை அடைய, ஆதித்தன் அத்தமனமானான்.]

பிலம்நீங்குபடலம் முடிந்தது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

செழுங்கதிர்ச் செல்வம்.

[கசுக—ஆம் பக்கத்தொடர்ச்சி.]

27 உரிமை யாள ருளங்கலங்கி
யோட வதைத்தன் ஞர்குடிலாற்
பிரிய மாகத் தனதுகுடில்
பெருக்கி வாழும் வாழ்வன்றித்
தெரியிற் பிறிதோர் வாழ்வில்லாத்
தீய வுலகில் வாழ்வதெங்ஙன்?
அரிய பொருளே! செழுமறையி
னகத்தார் சோதிச் செழுங்கதிரே!

28 மண்ணோர் காணு வகையெழினி
மழைபான் மறைத்து வானத்தின்
கண்ணே நீநின் குழுவுடனே
கங்குல் பகலாப் பயில்கூத்தை
அண்ணல்! கோடைக் காலமுற்றும்
அவனிக் காடும் பொருள்தெளிப்பாய்;
விண்ணோர் தலைவா வேதமணி
விளக்குச் சுடரே செழுங்கதிரே!

29 காலை யந்திப் பொழுதினிலே
கதிர்க்கை யாலே பலநிறத்தை
நீல வானத் திடைக்குழைத்து
நித்த நித்தந் தீட்டி வந்தும்
சாலப் பெருவத் தகைகுறித்தோ
தவிர்த்துப் பின்னு மழிக்கின்றாய்;
பாலர் பள்ளி மணலெழுத்துப்
பயில்கின் றாயோ? செழுங்கதிரே!

30 ஆக்குற் றுயிராய்க் கிடக்கவைத்த
அதற்குஞ் சினவாள் கொலைசெய்த
தீங்கைக் குறித்துத் தன்மகன்மேற்
சேக்கு மயலார் மேற்கனன்று
தாங்கி மகனைக் காக்குமொரு
தாய்நா னுகுந் தகையுமிலேன்
யாங்குப் பெறுவே னினதன்பை
யாதென் னிலையே? செழுங்கதிரே!

31 எல்லார் தமையும் நீவருமுன்
எழுப்பிப் பின்னர் வருகின்றாய்;
பொல்லா வினையேன் றனித்துன்னைப்
புகன்று குறைகள் போக்கற்கும்
ஒல்லா திங்ஙன் வாணாளும்
ஓடி வீணா வொழிந்ததுவே;
செல்லாங் கால மெலாநொடிக்குட்
செகத்திற் காக்குஞ் செழுங்கதிரே!

32 தோற்று பனியின் றுளியூடே
தோன்றி யவற்றை மணிமுத்தம்
பற்று பவழ மெனமருட்டிப்
பள்ளிச் சிறாரைப் பயன்படுத்தி
எற்று புனலி னிடைவானத்
திலங்கும் வில்லைக் கொணர்ந்தவரைக்
கற்றுக் களிக்கப் பயில்விக்குங்
கடவுட் சோதிச் செழுங்கதிரே!

33 திங்க ளிரவிற் றன்னுடனே
யுடுவுந் திகழத் தான்றிகழ்ந்து
அங்க ணுலகி லொளிபரப்பி
யாட்சி புரியு மதுபோலத்

தங்கு மதியு முடுவுமுன்றன்
சந்நி தானத் தொளிர்ந்திலவா
மங்கித் திசியு மறையாதோ?
மறையா நேர்மைச் செழுங்கதிரே!

34 நீசென் றணேயோ வெனமெல்ல
நீட்டித் தலையைக் காட்டிமன
மாசொன் றியவெங் கள்வரொடு
வனத்தின் மாவு மதியுடுவும்
தேசொன் றியவாய் மண்விண்ணிற்
றிரிந்து மிளிருந் திறமென்னே?
பாசொன் றிமயப் பருப்பதத்துப்
பனிநீர் நெகிழ்க்குஞ் செழுங்கதிரே!

35 தீய வற்றோ டளாய்த் தூய்மை
தீர்ந்த புனலைச் சேர்த்தெடுத்து
மேய மாசெல் லாங்கழுவி
மினுக்கித் துடைத்துப் பினுமாடச்
சேயை விடுக்குந் தாய்போலச்
செகத்திற் களிக்குந் திருத்தாயே!
ஆயற் கரிய வரும்பொருளே!
யன்பிற் கெளிய செழுங்கதிரே!

வேறு.

36 அள்ளிப் பருகினுமென்? ஆனந்த மேலிட்டால்
துள்ளிக் குதித்தாடித் தோயினுமென்—உள்ளத்தாம்
காதல் தணியாதே கற்குல்பக லென்பதற்றப்
போதக் கதிர்ப்பரவை புக்கு.

நிறைவேறியது.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

1934-ஆ மேமீ 5உ (பவ-ஆ சித்திரைமீ 23உ) மாலை 5½ மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாத ஸேதுபதி மஹாராஜா அவர்கள்,—அக்கிராசனாதிபதி,
2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, V. சுந்தரமையர் அவர்கள் B.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1933-ஆ டிசம்பர்மீ முதல் 1934-ஆ மார்ச்சுமீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய விருதுநகர்ச் சச்சிதானந்தம்பிரஸ் புரொப்ரைட்டர் மகா-ா-ா-ஸ்ரீ ராமலிங்கக் குருக்கள் அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. திருவாங்கூர் ஸ்டேட் எயிடெட் பாங்கில் வட்டிக்குக்கொடுக்கப்பட்டுள்ள பிக்ஸெட் டெபாஸிட் ரூபா பதினாயிரத்தையும் காலவரையறையான படியால் திரும்பப்பெற்று அதனை மதுரையிலுள்ள இந்தியன்பாங்கில் ஒரு வருஷகாலத்துக்குப் பிக்ஸெட் டெபாஸிட்டில் வட்டிக்குக்கொடுத்துவைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

IV. 1934-1935-ம் வருஷத்துச் சங்கமாபீசு வரவு செலவு மதிப்புத்திட்டம் அங்கீகரிக்கலாயிற்று.

V. சங்கம் அச்சாபீஸைத் திரும்பச்சீர்ப்படுத்துதல்சம்பந்தமாகக் கௌரவ காரியதரிசிகள் எழுதிய மெமோ வாசிக்கப்பெற்று அதிற்கண்டபடி செய்ய அனுமதிதரலாயிற்று.

VI. சங்கம் அச்சாபீஸில் உபயோகத்திலில்லாது கிடக்கும் பழைய இஞ்சினையும் அதன் பாகங்களையும் மற்றும் உபயோகமில்லாத மெஷின்களையும் விற்க அனுமதிதரலாயிற்று.

VII. சங்கக்கட்டிடவேலைகள் சம்பந்தமாகக் கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோ படிக்கப்பெற்று அங்கீகரிக்கலாயிற்று.

VIII. சங்கத்தின் 1933-1934 வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்ய, மதுரை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

IX. சங்கத்தைச்சேர்ந்த பாண்டியன் புத்தகசாலைக்குப்பீரோக்கள் வகையரா செய்து தமிழ்ப்புத்தகம் முதலியவற்றை வாங்கிவைத்து ஒழுங்குபடுத்த வேண்டிய விஷயமாகக் கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோ படிக்கப் பெற்று அதிற்கண்டபடிசெய்ய அனுமதிதரலாயிற்று.

X. சங்க வருஷோத்ஸவம் நடத்துதல்சம்பந்தமாகக் கௌரவகாரிய தரிசிகள் எழுதிய மெமோ படிக்கப்பெற்றது. வருஷோத்ஸவத்தை இராமநாதபுரத்தில் நடத்த ஏற்பாடுசெய்யவேணுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதி அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரை.
5—[illegible]—'34.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.

உ

பிழையும் திருத்தமும்.

சென்ற சித்திரைச் செந்தமிழ்ப்பகுதியில் கசுரு-ஆம்பக்கத்தில் மதிப்புரை யெழுதப்பட்ட தருக்கசாத்திரச்சுருக்கம் என்ற புத்தகத்தை ஆக்கியோரும் பிரசுரித்தவரும் முறையே நல்லூர்-சுவாமி ஞானப்பிரகாசரும், பாலபண்டிதர் ஞானப்பிரகாசருமாவர்; ஆதலால் அப்புத்தக மதிப்புரையின் முதல்வரியில் நல்லூர்ப் பாலபண்டிதர் சுவாமி ஞானப்பிரகாசர் என்றிருப்பதை நல்லூர்-சுவாமி ஞானப்பிரகாசர் என்று திருத்திக் கொள்க.